இலங்கை திறந்த பல்கலைக்கழகம்

கல்விப்பீடம்

முன்பள்ளி மற்றும் ஆரம்பக்கல்வி டிப்ளோமா நிகழ்ச்சித்திட்டம் - 2020/2021

இறுதிப்பரீட்சை

**EPD4530/ESD2230 –** பிள்ளை விருத்தி **II**

காலம்: மூன்று (03) மணித்தியாலங்கள்

திகதி:- 25.06.2023 நேரம்: பி.ப. 01.30 - பி.ப 04.30

- பகுதி **I** இல் அனைத்து வினாக்களுக்கும் பகுதி **II** இல் ஏதேனும் மூன்று வினாக்களுக்கும் விடை தருக.

## பகுதி - I

1. நரம்புத் தொகுதியில் (Nervous System) காணப்படும் நரம்பணுக்கள் (Neurons) மூன்றினைப் (03) பெயரிட்டு, மேற்குறிப்பிட்ட நரம்பணுவொன்றின் தொழிற்பாட்டை விளக்குக.
2. அறிவாற்றலில் உள்ளடங்கும் மூன்று (03) எண்ணக்கரு செயன்முறையை விளக்குக.
3. பெரிய ஐந்து (Big Five) ஆளுமை மாதிரியினால் முன்வைக்கப்பட்ட ஐந்து (05) ஆளுமை மாதிரிகளை எழுதுக.
4. பதகளிப்பு வேறுபாட்டு குழப்பத்திற்கான (Separation Anxiety) காரணங்கள் மூன்றினைச் (03) சுருக்கமாக விபரிக்குக.
5. கெஸ்ரால்ட் உளவியலாளர் முன்மொழிந்த வடிவத்தை உருவாக்குதல் பற்றிய மூன்று (03) கொள்கைகளை வரைபடத்துடன் விளக்குக.
6. கார்ல் ரோஜர்ஸின் கோட்பாட்டினடிப்படையில் பிள்ளைகளின் ஆளுமையில் எவ்வாறு சிதைவு ஏற்படுகிறது என்பதனை சுருக்கமாக விபரிக்குக.
7. ரெனேடேகார்ட்டினால் முன்வைக்கப்பட்ட துலங்கல் (Reflexive Concept) எண்ணக்கருவினை விளக்குக.
8. பிள்ளைகளிடம் இனங்காணக்கூடிய உளவியல் கோளாறுகள் ஐந்தினைப் (05) பெயரிடுக.

**(5 X 8= 40** புள்ளிகள்)

## பகுதி - II

9.

i. "கவனம்" என்றால் என்ன? விளக்குக.

(05 புள்ளிகள்)

ii. மாணவர்களிடத்தில் கவனத்தை பாதிக்கும் வெளியக காரணிகள் ஐந்தினைக் (05) குறிப்பிடுக.

(05 புள்ளிகள்)

**iii.** மேற்குறிப்பிட்ட வெளியக காரணிகள் பிள்ளைகளின் கவனத்தை எவ்வாறு பாதிக்கும் என்பதனை விளக்குக.

(10 புள்ளிகள்)

10.

**i.** "பதகளிப்பு வேறுபாட்டு குழப்ப கோளாறுடைய" பிள்ளைகளிடத்தில் காணக்கூடிய பண்புகளை உதாரணங்களை பயன்படுத்தி விளக்குக.

(10 புள்ளிகள்)

**ii.** பதகளிப்பு வேறுபாட்டு குழப்பமுடைய முன்பள்ளி பிள்ளைகளிடம் அவற்றை குறைப்பதற்கு ஆசிரியர் மேற்கொள்ளக் கூடிய உத்திகள் **இரண்டினை (02)** விபரிக்குக.

(10 புள்ளிகள்)

11.

**i.** பிள்ளைகளின் உளவியல் கோளாறுகளின் விருத்தியில் வீட்டுச்சூழலின் தாக்கத்தினை ஆராய்க.

(10 புள்ளிகள்)

**ii.** பிள்ளைகளின் உளவியல் கோளாறுகளை குறைப்பதில் பெற்றோர்கள் எவ்வாறு தலையிடமுடியும் என்பதனை உதாரணங்கள் மூலம் விபரிக்குக.

(10 புள்ளிகள்)

12.

**i.** ஆளுமை விருத்தியில் தாக்கம் செலுத்தும் காரணிகள் **இரண்டினை (02)** எழுதுக.

(06 புள்ளிகள்)

**ii.** சிக்மன் புரொய்டின் கருத்துப்படி ஆளுமையை விளக்குக.

(06 புள்ளிகள்)

**iii.** பிள்ளைகளின் ஆளுமை விருத்தியில் ஆரம்பப் பாடசாலை ஆசிரியரின் வகிபங்கு பற்றி விபரிக்குக.

(08 புள்ளிகள்)

13.

**i.** "அவதானிப்புக் கற்றல்" என்றால் என்ன? உதாரணங்கள் மூலம் விளக்குக.

(10 புள்ளிகள்)

**ii.** கற்றல் - கற்பித்தல் செயன்முறையின் போது "சுற்றாடல் சார் செயற்பாட்டு" பாடத்தில் ஆரம்பப் பாடசாலை ஆசிரியரென்ற வகையில் எவ்வாறு அவதானிப்பு கற்றலை மேற்கொள்ள முடியும் என விளக்குக.

(10 புள்ளிகள்)

- *முழுப்பதிப்புரிமை பெற்றது* -